
# விபவி

மார்ச் 2000 செய்தி மடல்




விபவி கலாசார மையம். 81/4, பாகொடை வீதி, நுகேகொடை.

நிகழ்ச்சி நிரல்

மார்ச் 3ஆம் திகதி மு.ப. 9.30 க்கு
W.E.R.C. இல்
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

**ஆய்வரங்கு**

1. "பெண்களும் கலாசாரமும்" - இனோக்கா பிரியதர்சினி
2. பெண்களும் யுத்தமும்" - கலாநிதி செல்வி திருச்சந்திரன்
3. பூகோளமயமாக்கலும் கலாசாரமும் - கலாநிதி சுனில் விஜே சிறிவர்த்தன

(சமகால மொழிபெயர்ப்பு வழங்கப்படும்)

ஆய்வரங்கு முடிவில் - இலைகளும் முட்களும் என்ற மலையாளத் திரைப்படம் காண்பிக்கப்படும்.

---

மார்ச் 19 ஞாயிறு பி.ப. 3.30

**சிறுகதை மேம்பாட்டு அரங்கு**

ஜனவரி, பெப்ரவரி மாத சிறுகதைகள்

வீரகேசரி - சி. சிவகுமார்
தினகரன் - பொ. சோதிலிங்கம்
தினக்குரல் - கே.எஸ். சிவகுமாரன்
சஞ்சீவி - Dr.M. K. முருகானந்தன்.

நிகழ்ச்சி நிரல்

## சூரியனைப் பற்ற வைக்க ..........

நிச்சயமாய்
எனது சந்தோசங்கள்
உன்னைக் காயப்படுத்தும்
என்றுதான்

கண்ணீர்க் கூட்டுக்குள்
ஒரு துயரமாகவே
என்னை வாழவிட்டாய்!

வலிமை மிகு நம்பிக்கைகள்....
உதிர்ந்து போகும்படி,
தோல்வியை நோக்கியே
துரத்துகிறாய்!

மேலும்
உனக்குப் பொழுதுபோக்காகவும்,
எனக்குப் போராட்டமாகவும்
போய்விட்டது,
(என்)? வாழ்க்கை!

நீ கனவு காண்பதற்காக
என் கண்களைப் பறித்தாய்!
நீ உலாவி மகிழ்வதற்காக ...
என் கால்களைத் தடுத்தாய்!

தாழ்மையை ...
பற்றுதலை....
உன் திமிரிபிடித்த அதிகாரங்கள்

தாட்சண்யமின்றி
தண்டித்தன!

அன்பும் ...... இரக்கமும்
வசீகரமும் பொருந்திய
என் இறகுகளைப் பிடுங்கிப் பிடுங்கிப்

உன் கறைபடிந்த பற்களை
(இன்னும்)
எத்தனை காலத்திற்கு
தேய்த்துக் கொண்டிருப்பாய்?

நிச்சயமாய் ...
எத்தனை தீப்பந்தங்களை
எறிந்தாலும்

சூரியனைப் பற்றவைக்க
உன்னால் முடியாது...!!!

**- அனார்**

மார்ச் 8 - சர்வதேசிய மகளிர் தினம்

# நாவல் இலக்கியத்தில் நனவோட்ட யுகம்

தமிழிலே நனவோட்ட நாவல், அத்திவாரம் இன்றி எழுதப்பெற்ற, பூர்த்தியாகாத வீடு என்றே கருதத் தோன்றுகிறது. இரு முதல் தேவைகள் இங்கு இல்லாமற் போயின. உளவியல் பற்றிய பரவலான அறிவும் தெளிவும், மொழியியல் பற்றிய சர்ச்சையும் பரிசீலனைகளும். இவையே , ஐரோப்பிய நனவோட்ட எழுத்தாளரின் கருவிகள். அதற்கு மேல் இரு உலகப் போர்களுக்கிடையில் காணப்பட்ட குழப்பமான நிலைமை , இக் குழப்பத்தின் காரணமாக சிலருக்கேற்பட்ட நம்பிக்கை வறட்சி , விரக்தி, புற உலகப்பற்றின்மை, அகநோக்கு ஆகியனவே தனிமனித வாதத்தின் உச்ச நிலையாக தனவோட்ட நாவலில் சென்று அமைதி கண்டன. எலியட் எஸ்ரா பவுண்ட் போன்ற கவிஞரிடத்தும் இத்தாக்கத்தின் எதிரொலிகளைக் கேட்கலாம். எலியட்டின் "தரிசு நிலம்" (The Wastland 1922) பெயரிலேயே இப்பண்பைக் காட்டி விடுகிறது. எஸ்ரா மவுண்ட் ஒரு கட்டத்தில் பாசிஸ்ட் ஜடாமுனி முசோலினியின் அபிமானியாகிப் பின்னர் சித்த சுவாதீனமிழந்து இறந்தார். எலியட்வாழ்க்கையின் பிற்பகுதியில் கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொண்டார். இவ்வாறு மதம், சமூகம் அரசியல் முதலிய மனித ஒழுக லாறுகளில் பிடிப்பின்மையையும், நம்பிக்கை வரட்சியையும் கொண்ட சில எழுத்தாளர் நனவோடட்த்தின் பெரும் தலைகளாக விளங்கினர். தான் பிறந்த பூமியான அயர்லாந்து கலை வாழ்விற்கு ஏற்றதன்று எனக் கருதிய ஜோஸ், நிரந்தர பிரயாணியாக ஐரோப்பிய நாடுகளில் சுற்றித் திரிந்தார்.

கத்தோலிக்க மதத்தில் நம்பிக்கை இழந்த அவர் , தன்னைத் தானே நாடுகடத்திக் கொண்டார். வெர்ஜினயா வூல்ப் சமூகத்தொடர்புகள் அதிக மின்றிக் குறுகிய "இலக்கிய வட்டம் " ஒன்றினுள் கிடந்து அடைகாத்து நாவல் பொரித்தவர். சமூகத்தின் விளை பொருளாகவும் தனி மனிதருக்கும் சமூகத்திற்கும் இடை விடாது நடைபெறும் இயக்கத் தொடர்பின் சிந்தனை வடிவமாகவும் இருக்க வேண்டிய நாவல் தடம் புரண்டு, சுழி கெட்டுத் தடுமாறியமையையே "நனவோட்ட யுகம் " ஐயத்திற்கு இடமின்றிக் காட்டுகிறது. இவ்விலக்கிய சம்பந்தப்பட்டிருந்தவர்கள், அறிவுக் கூர்மை படைத்த ஆற்றல் மிக்க எழுத்தாளர் என்பதில் ஐயமில்லை. அதனால் இயக்கம் பொதுவாகத் தோல்வி கண்ட போதிலும் , தனிப்பட்ட சாதனைகள் பாராட்டத் தக்கனவாய் எஞ்சியுள்ளன. சின்னாபின்னப்பட்டு சிதறுண்ட மனித மனத்தின் உணர்வு களையே மாற்றமின்றிக் காட்ட வேண்டும் என்ற வேர்கள் தத்துவமானது, ஒருமைப்பாட்டையும் , ஒழுங்கு முறை யையும் விளையும் சமுதாய வேட்கைக்கு முன் எதிர்த்து நிற்க ஆற்றலின்றி அழிந்தது. அமெரிக்க விமர்சகர் ஒருவர் அளந்து கூறியுள்ளது போல், வெர்ஜீனிய வூல்ப் போன்றோரின் நாவல்களில் காணப்படும் அறைகளுக்குள் நாம் பிரவேசித்தால் ஆட்கள் எவரையும் காணமுடியாது. ஆவியுலகில் எத்தனை காலம் தான் வாசகர்கள் ஆறுதலாகத் தங்க முடியும்?

**பேராசிரியர் க. கைலாசபதி**

(தமிழ் நாவல் இலக்கியம் நூலிலிருந்து)

# குதிரையம்

விபவி அண்மையில் நடத்திய கைலாசநாதனுடைய சித்திரக் கண் காட்சியிலும் அது பற்றிய கலந் துரையாடலிலும் நான் கலந்து கொண்டேன். இதற்கு அடுத்த ஒருசில நாட்களுள் அழகிய சிற்பம் ஒன்றைக் காணும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. இதில் நான் பெற்ற கலை அனுபவத்திற்கு விபவியின் சித்திரக் காட்சி எங்ஙனம் துணையாயிற்று என்பதைச் சொல்வதற்காக இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

அந்தச் சிற்பம் ஒரு குதிரை. வெண்களியினால் செய்யப்பட்டது. ஏறக்குறைய ஆறு அடி அதன் உயரம். சற்று நேரம் பார்த்ததுமே அந்தச் சிற்பம் தன்பால் என்னை ஈர்த்துக் கொண்டது.

அந்தக் குதிரையில் முன்னங்கால் களுக்கு அயலே அதன் குட்டி. அது தனது தலையை நிமிர்த்தி தாயின் கழுத்தில் மெல்ல உரசிக் கொண்டிருக்க, தாய் அந்தக் குட்டியின் பக்கமாகத் தலையைத் தாழ்த்தி வைத்துக் கொண்டிருந்தது. குதிரையின் கண்களிலே ஒரு பரிவு! மகிழ்வு! அந்தப் பூரிப்பு குதிரையின் முகம் முழுவதிலும் விரிந்து பரவுவது போலிருந்தது! அந்த முகம் குட்டியின் கழுத்துப்பக்கமாகச் சற்றே சாய்ந்து இருந்தது. இல்லை! அந்தத் தாய் தனது குட்டியை முத்தமிடக் குனிந்து கொண்டிருக்கிறது என்ற ஒரு பிரமை எனக்கு.அந்தக் குட்டியின் பிஞ்சு உடலை அந்த வெண்களியில் எப்படி வடித்தானோ அந்தச் சிற்பி!

குதிரையில் பிடரிமயிர் (உளை) வெகு லாவகமாகச் சரிந்து பிடரியின் ஒரு பக்கமாகப் புரண்டு கிடந்தது. அதைப் பார்த்தவுடன் கைவிரல்களை அதன் மேல் ஓட விட்டு அதன் நெகிழ்வைப் பரிசிக்க வேண்டும் போலிருந்தது எனக்கு. குதிரை தனது வீறும் வேகமும் ஓய்ந்த நிலையில் நின்று கொண்டிருந்தது. ஆயினும். அதன் வைரம் பாய்ந்த உடல் , முறுக்கேறிய தசை நார்கள், உரம் கொண்ட கால்கள் ஆகியவற்றையெல்லாம் சிற்பி அந்தச் சிலையிலே காட்டத் தவறவில்லை. ஒரு காம்பீர்யத்தின் சாய்ந்த நிலையை அதில் நான் தரிசித்தேன். ஒரு பிராணி தாய்மையுணர்வில் லயித்து நிற்கும் ஒரு நளினம் இந்தக் குதிரைச் சிற்பத்தில் தேங்கி நின்றது!

சென்னையில் உள்ள மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையின் மூன்றாவது மாடியில் இந்தச் சிற்பம் இருக்கிறது. இதனை முன்னரும் சில தடவை நான் பார்த்திருக்கிறேன். ஆயினும் விபவி கருத்தரங்கில் கலாரசனை பற்றிப் பெற்றுக் கொண்ட தெளிவு என்னும் ஒளியின் துணையுடன் இச் சிற்பத்தைப் பார்த்த பொழுது , இதிலுள்ள கலைத்துவ மகிமையை என்னால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

விபவி கருத்தரங்கிலே ஓவியர் கைலாசநாதன் கூறிய ஒரு கருத்து என் மனதில் நன்றாகப் பதிந்திருந்தது. "ஒரு குதிரையை வரைய வேண்டுமானால், ஓர் உடலும் தலையும் நான்கு காலும் ஒரு வாலும் வரைந்து விட்டால் மாத்திரம் போதாது. அந்தச் சித்திரத்திலே குதிரைக்குரிய குணவியல்புகள் வெளிப்படவேண்டும். குதிரையை நன்றாக அவதானிக்கின்ற ஒருவனால் தான் இது முடியும், குதிரையை பராமரிப்பவன் இப்படியான ஒருவனாக இருக்கலாம்," என்றார் அவர்.

'குதிரையின் சித்திரமாயினும் சிற்பமாயினும் அதிலே குதிரையின் உடலமைவும் குணவியல்புகளும் முழுமையாக வெளிப்படல் வேண்டும். அதாவது அதிலே 'குதிரையம்' வெளிப்படல் வேண்டும்' என்று விபவியின் அந்தக் கருத்தரங்கு அன்று ஒரே குரலில் ஏற்றுக் கொண்டது. இவ்வகையில் "குதிரையம்" முழுமை பெற அமைந்த ஒரு சிற்பத்தைப் பார்த்ததில் நான் மனம் பூரிக்கின்றேன்.

*வ. இராசையா*

# மஹகம சேகர

கவிதைகளைச் சுவைப்பதற்கும் அப்பால் எம்மை சிந்திக்கச் செய்த ஒரு கவிஞன் மஹகம சேக்கர என்று கூறினால் அது மிகையாகாது. அவன் இறந்து ஆண்டுகள் பல கடந்து போயினும் பல்வேறு நினைவு கூரல் நிகழ்ச்சிகளில் மீண்டும் மீண்டும் அவனது ஆக்கங்கள் சமகால நிகழ்வுகளோடு ஒப்பு நோக்கப்படுவது மூலம் இது உறுதிப்படுத்தப்படுகிறது. அவனது சிந்தனைகள் எம்மை மீள மீள விழித்தெழச்செய்கின்றன. ஈழத்தின் பல பரம்பரையினர் குறிப்பாக இளைஞர்கள் இன்றும் அவனது கவிதைகளால் கவரப்படுகின்றனர். சேக்கரவின் கவிதைகள் எமது வாழ்க்கைக்கு தொடர்ந்து ஒளியூட்டிக் கொண்டிருக்கின்றன. அவனை அநுசரிப் பதற்கு பதிலாக அவனது சிந்தனைகளை நிகழ்காலத்தோடு ஒன்றிணைத்துச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

கடந்த இரண்டரை தசாப்தங்களாக எமது நாட்டில் இடம்பெற்றுவரும் துரித மாற்றங்களை சேக்கரவின் சிந்தனைகள் மூலம் சிந்திக்கலாம். இன்று சமூகத்தில் நிலவும் பாவனையாளர் வாதம், தனிநபர் வாதம் , சுயநலவாதம் காரணமாக மனித உறவுகளில் ஏற்பட்டிருக்கும் விரிசல்கள் பற்றி சேக்கரவின் சிந்தனை கள் ஊடாக மீள் பார்வை செய்வதே எனது நோக்கமாகும்.

பாவனையாளர்வாதம் என்ற போர்வையில் அனைத்தும் விற்பனைப் பண்டங்களாக்கும் ஓர் யுகத்திலேயே நாம் வாழ்கின்றோம். உதாரணமாக தொலைக்காட்சி தொழில் நுட்பம் இன்று இன்றியமையாதது. ஆனால் அது அனைத்தையும் விற்பனைப் பண்டங் களாகவே கருதுகின்றது. எப்பொருளையும் மலினப்படுத்தி விற்பதையே தொலைக் காட்சி குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனிதனின் சிந்திக்கும் ஆற்றலை மழுங்கடிக்கச் செய்து வெறுமனே பொழுதைப் போக்கவே அது செயற் படுகின்றது.



லிபரல் வாதம் தனிநபரின் நலனையே வலியுறுத்துகின்றது. அரசு தனி நபர்களுக்கு அச்சுறுத்தலாகவே கருதப்படுகின்றது. உதாரணமாக எமது நாட்டின் வறுமைக் கோட்டில் வாழும் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றே இன்று கூடிய அன்னியச் செலாவணியை உழைக் கின்றனர். பல்வேறு இம்சைகளை அனுபவிக்கும் அவர்கள் சில சமயங்களில் பிரேதப்பேழைகளிலேயே இலங்கை திரும்புகின்றனர். ஆனால் அதே சமயம், தனிநபர் சுதந்திரம் என்ற பெயரில் ஒரு தனிநபர் அப்பெண்கள் உழைக்கும் அந்நியச்செலாவணியைப் பயன்படுத்தி தனது தனிப்பட்ட பயன்பாட்டிற்கு 40 லட்சம் ருபாய் செலவில் ஒரு சொகுசான காரை வாங்குகிறான். பொது மக்களுக்கோ அல்லது அந்நியச் செலாவணியை உழைப்பவர்களுக்கோ ஒழுங்கான பொது போக்குவரத்து வசதியும் கிடையாது.

லிபரல் வாதம் நவீனத்துவத்தின் அரசியல் சிந்தனையாகும். இதனை விடுத்து அனைவரையும் பாதிக்கும் பொதுப் பிரச்சினைகளைப்பற்றி நாம் கலந்துரையாடவேண்டி உள்ளது. பிரச்சனைகளுக்கான தீர்வுகளை ஏற்கனவே தீர்மானித்து நாம் செயற படமுடியாது. எமது சமூகத்தை சிறந்த சமூகமாக மாற்றுவதற்குப் பொது நன்மை கருதி செயற்படும் அனைவரும் ஒன்றிணைந்து இயங்கவேண்டும். மனச்சாட்சிக்கு அமைய செயற்பட வேண்டும்.

குமுது குசும் குமார

## அமெரிக்கக் கழிப்பிடமும் இந்தோனேஷியக் காடுகளும்

அமெரிக்காவின் பெரிய "ஸ்காட் பேப்பர் கம்பெனி" இந்தோனேஷியாவிலுள்ள மூன்று லட்சம் ஏக்கர் காடுகளை வெட்டி அழிக்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் இருபத்தையாயிரம் பூர்வ குடிமக்கள் இடம்பெயர வேண்டியுள்ளது. இந்தக் காடழிப்பு ஏன் தெரியமா?

காடுகள் அழிக்கப்பட்ட இந்த நிலங்களில் இருபத்தைந்து கோடி யூக்களிப்டஸ் நடப்போகிறார்களாம். இந்த யூக்களிப்டஸ் மரங்கள் எதற்குப் பயன் படுத்தப்படவிருக்கின்றது? இந்த மரங்களின் மூலம் அமெரிக்கர்களின் பாவனைக்காக லட்சக்கணக்கான தொன்கள் கழிப்பறைத் தாள்களை (Toilet Tisue) அவர்கள் உற்பத்தி செய்யப் போகிறார்கள்.

* *

## கனவுகளும் கலைகளும்

கனவுகள் ஒரு தனி மனித ஆத்மாவின் வெளிப்பாடாயின் கலை மனித குலத்தின் ஆன்மாவின் வெளிபாடு எனலாம். இதர விலங்கினங்களுக்குக் கூட கனவுகள் உண்டு என்று நம்பப்படுகிறது. எனினும் மனிதன் மட்டுமே கலை ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். மனித வாழ்வும் நாகரீகமும் கலைகள் இன்றி உருவாக இயலாது.

நம்மை பிரதிபலித்து, நமது வாழ்வின் பொருளை துல்லியமாகப் புலப்படுத்தக் கூடிய தத்துவமே கலையின் பேராற்றலாகும்.

கலை, இயல்பாகவே ஒரு கலாச்சாரக் குழந்தையாக விளங்குகிறது. கனவுகளைப் போல கலைகளும் தம்மைத் தாமே உருவாக்கிக் கொள்ளும் விதிகளுக்கே கட்டுப்படும். எப்பொழுதெல்லாம் கலைகள் அவை தோன்றிய காலத்தின் அதிகாரத்தை தார்மீக நெறிகளை ஒரு புதிய உரிமை மறுக்கப் பட்ட சத்தியநாட்டத்தின் காரணமாக எதிர்த்துச் செயல்பட்டனவோ அப்பொழுதெல்லாம் அவைகள் ஒடுக்கப் பட்டனவேயன்றி முற்றிலுமாக அவற்றின் ஆற்றல் அழிக்கப்படவில்லை.

**இசபெல் அலன்டே - 1973.**

ஸி.ஐ.ஏ. யினால் சில்லி அதிபர்
அலன்டே கொல்லப்பட்டார்.
அவரது மருமகன் தான்
இசபெல் அலன்டே.

* *

## கருத்து வேற்றுமை

நம் நாட்டில் கருத்து வேற்றுமைக்கு மதிப்பு ஏற்படல் வேண்டும். கருத்து வேற்றுமை காரணமாக பகைமை பாராட்டலும், கேடுசூழலும் அறியாமை. கருத்து வேற்றுமைக்கு இடமும் மதிப்பும் கொடுப்பது சிறந்த நாகரீகமாகும். அவரவர் கருத்தை அவரவர் வெளியிடுவாராக. உலகம் கொள்ளத் தக்கதைக் கொள்ளும், தள்ளத் தக்கதைத் தள்ளும், பழைமை என்று மடமையைப் போற்றலும், புதுமை என்று செம்மையைத் தூற்றலும் அறிவுடைமையாகா. இக்குணமிக்க நாடு ஒரு போதும் வளர்ச்சியுறாது. கருத்து வேற்றுமைக்கும் பொருந்திய புதுமைக்கும் இடம் தரும் நாடு வளரும்.

**திரு. வி. க**

* *

# இரண்டாயிரம் ஆண்டே வருக!

இரண்டாயிரம் ஆண்டே வருக, என்ற தலைப்பில்
விபவியினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவியரங்கத்தில்
திரு. சிதம்பரப் பிள்ளை சிவகுமாரால் பாடப்பட்ட கவிதையில்
சில பகுதிகளை இங்கே தருகின்றோம்.

நாம் பிறந்த நூற்றாண்டை
பிரிந்து விட்டோம்
பிறந்த ஊரைப் பிரிவது போல
பழகிய ஆண்டுகளைப்
பிரியும் போதும் வலியுண்டு.

பழகிவிட்டால்
பேயைப் பிரிவது கூடத்
துயரம்தான்.

இருபதாம் நூற்றாண்டு
எப்படி இருந்தது?

விண்ணளாவி நிமிர்ந்தது
மனிதகுல விஸ்வரூபம்
புதிரவிழ்ந்து புதிரவிழ்ந்து...
மண்டியிட்டது இயற்கை.

பிரபஞ்ச வெளியின்
மூலைமுடுக்கெல்லாம் உலவித்திரிந்து
இயற்கை மூடிவைத்த
ரகசியங்களை தகர்த்துத் திறந்து
விஞ்ஞான விரிவு கொண்டோம்.

அந்தியிலோர் புதிர் முளைத்தால்
அர்த்தராத்திரியில் தெளிவு காண
புத்தியில் நெருப்பெடுத்தோம்.

எங்கள்
மண்டைச் சுரப்பியின்
மாய வல்லமையால்
வனாந்தரங்கள் நந்தவனங்கள்
ஆகிப் பூச் சொரிந்தன;
காட்டாறுகள் எங்கள் முன்
கைகட்டும் சேவகராச்சு;

எங்களைப் பிரதிபண்ணி
இயந்திரத்தில் அடிமைகள்;

காவலிட்ட கம்பிகளுக்குள்
மின்னை ஒடுக்கி விரித்தோம்;
அணுவைப் பிளந்தோம்;

காற்றைக் கிழித்து ககனத்தில் பறந்து
நிலாவில் கால் பதித்தோம்;

கிரஹப்பிரவேசத்திற்கு நாள்குறித்த
கிரகராசிகளிலெல்லாம்
கிரகப் பிரவேசம் செய்யும் எண்ணத்திற்கு
உயர்ந்தோம்;

இயற்கைக்கு நாங்களே
எஜமானர்கள் ஆவோம்;

இயற்கையை வெற்றிகொண்டு
எங்களைப் பாதுகாத்தோம்...
எங்களிடமிருந்து காத்துக்கொள்ள
எந்த நூற்றாண்டினதும் வழி திறக்க
வில்லை.
இருபதும் புரூட்டஸ் நூற்றாண்டுகள்;.

மீன்களைத் தின்னும்
மீன்களைப் போல
மனிதனைத் தின்னும் மனிதன்,
வேறெந்த விலங்கிடமும்
இத்தனை விபரீதம் இல்லை;

தங்கள் இரைக்காகவே
கொலை செய்யும் விலங்குகள்
கொல்லுகிற சந்தோஷத்துக்காகவும்
கொல்பவனாய்

மனிதன் தான்....
என்ன செய்ய?

கல்வி நமது வாழ்க்கை முறை
மதங்கள் கலாச்சார மரபு....
இவையெல்லாம்
சென்ற நூற்றாண்டில் நம்மை
வாழத் தகுந்த மனிதராய்
உருவாக்கத் தவறியதை
பட்ட காயங்கள்
சாட்சி சொல்லி நிற்கின்றன;

மேலே மேலே பறந்ததெல்லாம்
பள்ளத்தாக்கின் உள்ளேதானா?

நான் முன்னோக்கி நடந்தேன்
ஆனால் பின்னால் போய்க்
கொண்டிருந்தேன்
என்பது
ஓடும் ரயிலினுள்ளே
உண்மையாகி விடுவது போல
சாதனைகள் செய்தபடி- நாம்
சரிந்து கொண்டிருக்கிறோம்;

பிரபஞ்சத்தில் அனைத்துக்கும்
பெயர் சூட்டினோம்
எடுத்ததற்கெல்லாம் இலக்கணம்
வகுத்தோம்
இன்னும் கவனிக்கப்படாமல்
எஞ்சிய மலர்களாய்
இருக்கின்றோம் நாங்கள்;

நாம் மனிதர்களாவது
என்று நடக்கும்?

மார்க்சியத்தின் வெளிச்சமும்
மங்கிக் கிடப்பது
வேதனை தருகின்றது;

மதங்களின் விஷயத்திலும்
இந்த மயக்கமே நேர்ந்தது;

வலைகளாய் நம்மிடம்
ஊகங்கள்...
வீசி வீசி
விரும்பியதைப் பிடித்துக் கொள்கிறோம்;

எல்லோரும் பொய்கள் தான்
சொல்லிக் கொண்டிருக்கிறோம்
ஆளுக்குத் தகுந்தபடி
அதன் பெயர் மட்டும் மாறும்;

பொய்களே சுகம் என்று
ஆகிவிட்டோம்;

பொய்களே உண்மையென்று
நம்புவதில்
விருப்பம் கொள்வோம்;

தேசமும் இனமும்
சிதைந்து கொண்டிருக்கும்...
வீரமுடன் நாம்
முன்னேறுகிறோம் என்போம்;

போர்வெம்மை தாங்காமல்
புறப்பட்டு வந்துவிட்டோம்
பாட்டுக்கட்ட ஆரம்பித்தால்
போர்ப்பரணி தூள் பறக்கும்;

சண்டையிடும் வீரர்களைத்
தலைமையென்று ஏற்கமாட்டோம்
அடியுங்கோடா தம்பிமார்
அடியுங்கோடா என்று
அழிவுகளின் நோப்படாமல்
ஆரவாரித்திருப்போம்;

பொய்களே சுகம் என்று
பழகிவிட்டோம்
நாம் விரும்பாத உண்மைகள்
அழகற்றதாச்சு

கரப்பான் குடியமரும்
கழிப்பறை மாதிரி
அசிங்கப்பட்டுக் கிடக்கிறது
வாழ்வு;

புழுத்த பிணத்தில்
இதயத்துடிப்பைச் சோதிப்பது போல

எங்கள் அசிங்க மனதுக்குள்
அங்கிருந்து விளையும்
அரசியல் குப்பைக்குள்
அர்த்தத்தைத் தேடுகிறோம்;

ஆழமறியாத பள்ளத்தாக்கின்
ஓரத்தில்
ஆதாரமெதுவுமின்றி
நிற்கிறோம் நாங்கள்;

கண்திறந்து பார்க்கமாட்டோம்
விழுந்தாலும்
பிடித்துத் தொங்க
பொடியளின் வீரமுண்டு;

எங்கே போகிறோம் என்று
இந்தச் சந்தியிலேனும்
நின்று பார்க்குமா
என் இனம்?

இருட்டுக்குள் கிசுகிசுத்து
இருட்டுக்குள் பெருமை கண்டு
இருட்டுக்குள் கருத்தைப் பகிர்ந்து
இருட்டுக்குக் கதைகள் பேசி
இருளோடு வாழ்கிறோம் நாம்;

இந்த இருட் பாதையில்
பயந்தவன் வீரன் போல
விசிலடித்தபடி நடப்பதும்
துணிந்தவன் சத்தமின்றி
மௌனமாகப் போவதும் போல...

முரண்களால் மேலும்
இருள் நிறைத்தோம்;

எப்போதும்
எவராலும்
எப்படியும்
பறிக்கப்படலாம்
என்றிருக்கும் நம் வாழ்க்கை;

உயிரற்றுப் போன இந்த வாழ்வையும்
சுமந்து திரியவும்
இருளே நம் தேர்வு
இருளுக்குள் தொலைகிறது வாழ்க்கை...

எப்படியும் விளக்குகளை ஏற்றவேண்டும்
அந்த வெளிச்சக் கற்றைகள்
எங்களை விரட்டிப்பிடித்து
மீட்டுத் தரட்டும்

---

(17ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுகிறார். ஊர் வாலிபர்கள் குமர்ப்பிள்ளைகளின் மீது செய்யும் காடைத்தனங்கள், நீலப்படங்கள் திரையிடுதல், கணவனைப் பறிகொடுத்த இளம்பெண்களை வசை சொல்வது இப்படியான ஈனச் செயல்கள் இங்குள்ள கதைகளில் உறைப்பாகத் தாக்கப் படுகின்றன. இந்த நூலில் உள்ள கதைகள் (15) அத்தனையும் இன்றைய போரினால் தமிழ் மகளிர் அனுபவிக்கும் இன்னல்களைச் சொல்லும் கதைகள், இது இந்த சிறுகதைத் தொகுதிக்குரிய தனித்துவம்! சிறப்பு!

இந்நூலின் ஆசிரியராகிய திருமதி யோகேஸ்வரி கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகச் சிறுகதை இலக்கியம் படைத்து வருபவர். குடும்ப வாழ்வியல் கோலங்களை ஆரம்ப காலத்தில் சிறுகதைகளாக வடித்து வந்த யோகேஸ் அண்மைக்காலத்தில் தமிழர் சமுதாயத்தின் அவலங்களையும் மாற்றங்களையும் கதைகளாக எழுதி வருகிறார். மனித உணர்வுகளின் நுட்பமான சித்தரிப்பு, வளமான மொழிநடை என்பன இவரது எழுத்தில் மிளிரும் சிறப்புக்கள் ஆகும். ஈன்ற பொழுதில், இவருடைய இரண்டாவது சிறுகதைத் தொகுதி. கலைப்பட்டதாரி யாகிய திருமதி யோகேஸ்வரி மக்கள் வங்கியின் யாழ். கன்னாதிட்டிக் கிளையின் முகாமையாளராகப் பணி புரிகிறார்.

**ராஜன்**

# வன்முறைக் கலாச்சாரம்

கலாச்சாரம் என்பது மாசற்ற எண்ணக் கருவல்ல. அது சமூக சக்திகளின் மேலாண்மைக்கான போர்க்கவசமாகும். ஆகவே கலாச்சாரம் என்பது வர்க்கம், சாதி, இனத்துவம், பால்நிலை, பிரமுகர் சாமானியர், கிராமம் நகரம் என்ற வகையில் அதிகாரக் கட்டமைப்பு பற்றிய சமூகக் கருத்தாடல் இடம் பெறும் ஒரு களமாகும். ஆதலால் மனிதநேயத் திற்கும் சுதந்திரத்துக்கு மான போர்க்களமாக கலாச்சாரம் அமைகின்றது என்று ஒரு அறிஞர் கூறியிருக்கின்றார்.

இலங்கை சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. அப்படியிருந்தும் நமது நாட்டில் நாம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்ன மும் வன்முறை வழிகளைத்தான் கையாளுகின்றோம். எமது சமூகத்தில் பல மட்டங்களில் அதாவது குடும்பம், சாதி, இனம், அரசியல் ஆகியவற்றில் எழுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வன்முறை வழிதான் மேற்கொள்ளப்படுகின்றது. இது எமது கலாசாரப் பின்னணியைப் பிரதிபலிக் கின்றது. இன்று எமது கலாசாரம் வன்முறைக் கலாசாரமாக, ஏன் யுத்த கலாசாரமாக இருக்கின்றது? இதன் வரலாற்றுப் பின்னணியை நாம் சற்று ஆராய்வது பலனளிக்கக் கூடியதாக இருக்கும்.

## வடபுல புத்தெழுச்சி

ஈழத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பைக் கொண்ட தமிழ் தேசியத்தின் பிறப்பிடம் யாழ்ப்பாணம் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். இது வரலாற்று உண்மை. தமிழர்களுக்கு இந்தநாட்டில் விசுவாசமோ பற்றோ இல்லை என்று பேரினவாதிகள் காலத்துக்குக்காலம் கூறிவருகின்றனர். ஆனால் வரலாற்று உண்மையை அவர்களால் எப்படி மறைக்க முடியும்?

தென்இலங்கையில் பௌத்த புத் தெழுச்சி இயக்கம் ஆரம்பிப்பதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப் பாணத்தில் ஏகாதிபத்திய விரோத, கிறிஸ்தவ விரோத, தமிழ் சைவ புத்தெழுச்சி இயக்கம் ஆரம்பமாகி விட்டது. இந்தப் புத்தெழுச்சி இயக்கத் திற்கு ஆறுமுகநாவலர் தலைமை தாங்கினார். காசிவிஸ்வநாத ஐயர், வல்வாசி வைத்திலிங்கம் பிள்ளை, நீர்வேலி சிவசங்கர பண்டிதர் போன்ற புத்திஜீவிகள் இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றனர். 1864ல் நீர்வேலி சிவசங்கர பண்டிதர் அன்னிய மதங்களை நிராகரித்து, சுதேசிய மதத்தைப் பேணி வளர்ப்பதற்கான ஒரு இயக்கத்தை ஆரம்பித்து நடாத்தினார். இந்த இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் முதன்மை கொடுத்தனர்.

ஆறுமுக நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட புத்தெழுச்சி இயக்கம் பௌத்த புத்தெழுச்சி இயக்கத்தைப் போல பரவலாகவும் ஆழமாகவும் விஸ்தரிக்க வில்லை. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் யாழ்ப்பாண சமூகத்தி லிருந்த ஒடுக்கப்பட்ட அல்லது தாழ்த் தப்பட்ட மக்கட் பிரிவினரையும் உழைக்கும் மக்கட் பிரிவினரையும்

இவ்வியக்கம் உள்ளடக்காமையாகும். இப்பகுதி மக்கள் மீது செல்வாக்கை வளர்க்கத் தவறிவிட்டது. யாழ்ப்பாண சமூகத்தின் ஒரு குறுகிய வட்டமான உயர் குடியினர் மத்தியிலுள்ள புத்தி ஜீவிகள் மட்டதில் தான் இந்த புத்தெழுச்சி இயக்கம் தனது செல்வாக்கைச் செலுத்தியது. யாழ்ப்பாண சமூகத்தில் அன்று இருந்த குறுகிய சாதி அமைப்புத்தான் இதற்கு முக்கிய காரணம்.

அன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் குடிமக்களில் வசதி படைத்த பகுதியினர் தான் கல்வி, கலை, கலாசாரத்தை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்நனர். சங்கீதம், பரதநாட்டியம் போன்ற கலைத்துறைகளையும் இந்து கோவில்களையும் தமது ஏகபோக உடைமைகளாக வைத்திருந்தனர் உயர்குடி மக்களில் வசதி படைத்தவர்கள். நாட்டுக்கூத்து, கரகாட்டம், குரவை போன்றவற்றிற்கு அவர்கள் அங்கிகார மளிக்கவில்லை. உழைக்கும் மக்கள் கலைக்கு அங்கு இடமில்லை. விவசாயிகள் பார்வையாளர்களாக இருந்தார்களேயொழிய பங்காளர்களாக இருக்கவில்லை. இதன் காரணமாக நாவலர் காலத்து தமிழ் தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் பெருமளவு சாதனைகளை நிலை நாட்ட முடியவில்லை.

நாவலர் காலத்து புத்தெழுச்சி இயக்கத்தின் பின் 1924 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் தோன்றியது. பின்னர் இது வாலிபர் காங்கிரஸ் என அழைக்கப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தினாலும், இந்திய காங்கிரஸ் தலைவர்களான மகாத்மா காந்தி, நேரு போன்றவர்களின் செயற்பாட்டாலும் கவரப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஆங்கிலம் படித்த சில மாணவர்கள் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற இயக்கத்தை ஆரம்பித்தனர். இவ் வியக்கத்தின் உந்து சக்தியாக திரு. ஹன்றி பேரின்பநாயகம் செயற்பட்டார்.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1924, டிசம்பர் 29,30,31 ம் திகதிகளில் அதன் முதலாவது கூட்டத் தொடரை நடத்தியது. யாழ்பாண றிச்வே மண்ட பத்தில் (முன்னாள் யாழ்பாண நகர சபை இருந்த இடம்) இக்கூட்டத் தொடர் நடந்தது. இங்கு பத்து தீர்மானங்கள் திரு. ஹன்றி பேரின்பநாயகம் அவர்களால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன. சாதிவேற்றுமைக்கு எதிராகவும், தேசிய கலை இலக்கியம், இசை ஆகிய துறைகளுக்கு புத்துயிரளிப்பவர்களுக்கு சன்மானம் அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. இத்துடன் தேசிய இயக்கத்தை வலியுறுத்தி தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களமும் சிங்கள பாடசாலைகளில் தமிழும் கற்பிக்கப் வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1931 ஆம் ஆண்டு வரை செயற்பட்டது. இதன் பின்னர் அதன் செயற்பாடுகள் தளர்வடையத்தொடங்கியது. யாழ்ப்பாண சமூகத்தில் இவ்வியக்கத்தினால் பெரிய செல்வாக்கை நிலை நாட்ட முடியவில்லை. முக்கிய காரணம் யாழ்ப்பாணத்தில் அன்றிருந்த இறுக்கமான சமூகக் கட்டுப்பாடு. அத்துடன் ஆங்கிலம் படித்த புத்தி ஜீவிகளில் ஒரு பகுதியினர் மட்டும் தான் இவ் வியக்கத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இவ்வியக்கம் ஸ்தாபனப் படுத்தப்படவில்லை. மேலும் அன்று யாழ்ப்பாணத்தில் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இனவாதத்திற்கு எதிராக இவ்வியக்கத்தால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

1956 ம் ஆண்டிற்குப் பின்னர் ஈழத்தில் ஏற்பட்ட விழிப்புணர்வலை தமிழ் பிரதேசத்திலும் வீசத்தொடங்கியது. மார்க்ஸிஸ சிந்தனை வயப்பட்ட பேராசிரியர் கைலாசபதியும் முற்போக்கு எண்ணம் கொண்ட எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்தனர். இவர்களில் அநேகர் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்களும், கீழ் மட்டத்திலிருந்து வந்த சில எழுத்தாளர்களும் ஆவர்.

இவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தியதுடன் கலை இலக்கியம் உழைக்கும் மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் செயல்பட்டனர். இவர்கள் 60 ஆம் 70 ஆம் ஆண்டுகள் வரை தீவிரமாகச் செயல்பட்டனர். கலை இலக்கியத் துறையில் இவர்கள் குறிப்பிடத்தக்க அளவு சாதனைகளையும் புரிந்திருந்தாலும் யாழ்ப்பாணச் சமூதாயத்தில் பெரிய மாற்றத்தை இவர்களால் செய்ய முடியவில்லை. அத்துடன் இலங்கையில் வீசத் தொடங்கிய இனவாதப் புயலுக்கு இவ்வியக்கத்தினரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

## தென்புல புத்தெழுச்சி

தென் இலங்கையில் காலனித்வ எஜமான்களின் பிரதிநிதிகளான கறுப்புத் துரைமார் சுதந்திரத்தின் பின் அதிகாரத்திற்கு வந்தனர். இவர்கள் அரசயந்திரத்திலும் கலாசாரத் துறையிலும் மேலாதிக்கம் செலுத்தினர். இவர்கள் பெரும் நிலச்சுவான்தார் குடும்பங்களிலிருந்து ஆங்கிலம் கற்ற ஒரு கூட்டத்தினர். இவர்கள் தமது நாளாந்த வாழ்விலும் செயற்பாடுகளிலும் தமது எஜமான்களான ஆங்கிலேயரின் வாழ்க்கை முறையைப் பாவனை பண்ணினர்.

அதிகார வர்க்கத்தைச் சார்ந்த கறுப்புத் துரைமாருக்கெதிராக ஒரு இயக்கம் தோன்றியது. தேச பக்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்று தம்மைக் கூறிக் கொண்டு செயற்பட ஆரம்பித்தனர். ஒரு பகுதியினர் கலாசாரத் துறையில் புத்தெழுச்சியை ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறிக்கொண்டு செயலாற்றினர் இக்குழுவினர். ஆனால் இவர்கள் நிலப்பிரபுத்வ, குலரீதியான இனவாத, பெண்கள் விரோதக் கருத்துக்களைக் கொண்டவர்களாய் புத்தெழுச்சி என்று கூறிக்கொண்டு ஒரு இயக்கத்தை உருவாக்கி நடத்தினர். வெளித்தோற்றத்தில் இவ்வியக்கத்தினர் தேச பக்தர்களாகவும் கறுப்புத் துரைமாரின் கலாச்சாரத்தை எதிர்ப்பவர்களாகவும் தோன்றினாலும் உண்மையில் நிலப்பிரபுத்வ பிற்போக்கு கலாசாரத்தின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டனர்.

அனகாரிக தர்மபால, ஒல்கொட் போன்றவர்கள் இந்தப் புத்தெழுச்சி இயக்கத்திற்குத் தலமை தாங்கி நடத்தினர். ஏகாதிபத்ய அரசமைப்பு நிர்வாகயந்திரத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இயங்கிவந்த கிறிஸ்தவ திருச்சபையின் ஆதிக்கத்தை எதிர்த்து செயல் பட்டனர். இந்த இயக்கம்

காலனித்துவ நிலப்பிரபுத்வ விழுமியங்களை அடிப்படையாக வைத்துத்தான் இயங்கியது. இதன் காரணமாக இவ்வியக்கம் விரைவில் சீரழிந்து சிறுபான்மையினருக்கெதிரான வன்முறைக் கொள்கையைக் கொண்ட ஒரு சித்தாந்தத்தை மேற்கொள்வதற்கு இவ்வியக்கத்தை இதன் தலைவர்கள் இட்டுச் சென்றனர். அதாவது பௌத்த மதத்தை ஒரு அரசியல் கருவியாக உபயோகிக்க இவ்வியக்கத்தினர் முற்பட்டனர்.

கிராமப்புறச் சிங்கள சமூகத்தின் கூட்டு சமூக வாழ்க்கையையும் அவர்களது கலாச்சார அடையாளங்களையும் பிரதிபலிக்காத ஒரு சித்தாந்தத்தை திரு. தர்மபால கடைப்பிடித்து வந்தமையினால் அவர் தலைமை தாங்கி நடத்திய இயக்கம், சிங்கள மக்களின் நவீன வாழ்வுடன் பொருந்தக்கூடிய அடையாளங்களையும் கொண்டிராதபடியால் சீரழிந்து இனவாதத் ற்கு வித்திட்டது.

சிங்களவர் ஆரிய பரம்பரையினர். அவர்கள் எந்தவித பிற ரத்தக் கலப்பு மற்ற தூய ஆரிய ரத்தமுடையவர். சிறுபான்மை இனத்தவருடன் சிங்களப் பெண்கள் கலந்து கொள்ளாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு மாயைக் கருத்தை பிரசாரம் செய்தார் தர்மபால. அவர் ஏகாதிபத்ய எதிர்ப்பு கலாச்சார இயக்கத்தை நடத்தினார். அதே வேளை துரதிஷ்டவசமாக சிங்கள இனவாத பாசிஸக்கருத்தைப் பரப்பிய ஒரு முன்னோடியாகவும் திகழ்ந்தார். இதனால் அவரது புத்தெழுச்சி இயக்கம் கால கெதியில் தோல்வி கண்டது.

ஈழத்திலுள்ள இடதுசாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் கலாச்சாரத் துறையில் அதிக கவனம் செலுத்த வில்லை. மக்களின் விடுதலை சோஷலிஸம் ஆகியவற்றை குறிக் கோளாகக் கொண்ட இடதுசாரி அமைப்புக்கள் கலாச்சாரத்தை இரண்டாம் பட்சமாக அல்லது தாழ் நிலைப்பட்டதாகக் கருதினர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் கலாச்சாரத்துறையைக் கட்டி எழுப்ப முடியும் என்ற எண்ணத்துடன் செயல் பட்டனர். விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை தீர்மானிப்பதில் கலாச்சாரம் ஒரு அத்யாவசிய அம்சமாக இருக்கின்றது என்பதை உணரத் தவறிவிட்டனர். ஆனால் இடது சாரி இயக்கத்தைச்சார்ந்த உடக நதவல ஸ்ரீ சரணங்கர தேரர், பெத்த பொலானந்த தேரர் ஆகிய இருவரும் சமூக அரசியல் இயக்கத்தை துணிகரமான கலாச்சாரத் துறையினூடாகக் முன் கொண்டு செல்ல முயன்றனர். ஆனால் பௌத்த மகா சங்க எதிர்ப்புக்கு முன்னால் இயக்கத்துக்கு தாக்குப் பிடிக்க முடியவில்லை.

## பாரதத்தில்

இந்திய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கையில் இதற்கு சமாந்தரமாக வங்காளத்தில் கலாச்சார மறுமலர்ச்சி இயக்கமும் ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டன. பங்கிம் சந்திர சட்டர்ஜி, ரவீந்திரநாத் தாகூர், சரத் சந்திர சட்டர்ஜி, அரவிந்தர் விவேகானந்தர், வித்தியாசாகர் ஆகியோர் வங்க சமூக கலாச்சார இயக்கத்தை பெரும் சூறாவளி வேகத்தில் நடத்தினர். வட இந்தியாவில்

ராஜா ராம் மோகன் ராய் ஆரிய சமாஜத்தை ஆரம்பித்து சமூக கலாச்சார இயக்கத்தை நடத்தினர். கேரளத்தில் குமரன் ஆசானும் அவரைத் தொடர்ந்து வள்ளத் தோள், தகழி முதலியவர்களும் கேரள சமூக அரசியல் மாற்றத்திற்கு கலாச்சாரத்துறையினூடாகப் போராடி னர். தமிழ் நாட்டில் திரு. வி.க, ஈ.வே.ரா, ப.ஜீவானந்தம் ஆகியோர் சமூக கலாச் சாரத்துறைகளில் தீவிரமாக ஈடு பட்டனர். இப்டா (I.P.T.A) என்ற கலை சார்ந்த இயக்கம் வங்காளம், மகாராஷ் டிரம், கேரளம் போன்ற மாநிலங்களில் நடந்த விடுதலைப் போராட்டத்திற்கு பெரும் உந்து சக்தியாக இருந்தது.

இந்தியாவில் பல்வேறு இன, மத, மொழி சார்ந்த மக்கள் வாழ்கின்றார்கள். ஒவ்வொரு இனத்தைச் சார்ந்தவர் களுக்கும் அவ்வினத்துக்குரிய தனித் துவமான கலாச்சார, பாரம்பரிய பண்பாடும், கலை இலக்கியமும் உண்டு. இவைகளுக்குரிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. அதே வேளை இந்தியாவுக்கென்ற ஒரு பொதுமையான இந்திய கலாச்சாரம் இருப்பதைக் காண முடிகின்றது. இது எப்படிச் சாத்தியமாக இருக்கின்றது? அதாவது இந்தியா விலுள்ள சகல இனமதத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு தமது நாட்டின் விடுதலைக்காகப் போராடினார்கள். இப்போராட்டத் திற்குத் தத்தமது கலை இலக்கியங்களை அர்ப்பணித்தார்கள். இப்போராட்டத்தில் உதித்த தேச பக்த உணர்வு தான் இந்திய கலாச்சாரத்தை உருவாக்கியது. நான் இந்தியன், எனது தாய் நாடு இந்தியா, எனக்கென ஒரு இந்திய கலாச்சாரம் இருக்கிறது என்ற பெருமித உணர்வை ஒவ்வொரு இந்தியனுக்கும் கொடுக் கின்றது.

## ஈழ கலாசாரம் உருவாக வேண்டும்

ஈழத்தில் இரண்டே இரண்டு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் தான் வாழ்கின்றார்கள். ஆனால் இலங்கை யில் அன்னிய ஆட்சி நிலவிய காலத்திலேயே இனவாத நச்சு விதை விதைக்கப்பட்டுவிட்டது. நமது நாட்டை ஆட்சி செய்வதற்காக பிரித் தாளும் தந்திரத்தை பிரித்தானிய ஏகாதிபத்தியம் கையாண்டது. அதே வேளை அநாகரீக தர்மபாலா போன்ற வர்களும் இனவாத விதையை விதை த்து விட்டனர். ஈழத்தில் இரு மொழி களைப் பேசுகின்ற மக்கள் மத்தியில் நான் இலங்கையன் என்ற உணர்வு தேசபக்த உணர்வு இல்லை.

1956 ஆம் ஆண்டுக்குப் பின் ஒரு தேசிய விழிப்பு ஏற்பட்டது. ஆனால் இது தேசிய ஒருமைப்பாட்டிற்கு மக்களை இட்டுச் செல்வதற்குப் பதிலாக இனவாதத்தை வளர்க்கும் பாதையில் இட்டுச்சென்றது. சிங்கள மக்கள் மத்தியில் இது பௌத்த சிங்கள நாடு என்ற பேரினவாத உணர்வை சில தீய சக்திகள் ஊட்டி விட்டன. இந்த நச்சுணர்வு பூதாகர மாகி இன்று பெரும் இனவாத யுத்தமாக வெடித்து இரு மொழிகளைப் பேசுகின்ற மக்களை நாளாந்தம் உயிர்ப் பலியெடுத்துக்கொண்டிருக்கிறது. இன்று எமது நாட்டின் கலாச்சாரம் இனவாத வன்முறைக் கலாசாரமாக, யுத்த கலாசாரமாக மாறிவிட்டது. சுதந்திரத்திற்குப் பின் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் எல்லாம் இந்த நாசகார இனவாத வன்முறைக் கலாசாரத்தை ஒழித்துக்கட்டுவதற்குப் பதிலாக இதை வளர்ப்பதில் பெரும் பங்களித்துள்ளன.

அரசு கலாச்சாரத்தை மேலும் மேலும் தனது இறுக்கமான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கு காலத்துக்குக் காலம் முயற்சித்து வருகின்றது. இது ஒரு ஆபத்தான செயற்பாடு. அடுத்த ஆபத்து மேற்குநாட்டு ஏகாதிபத்யங்கள் தமது பூகோணமயமாக்கல் திட்டங்கள் மூலம் எமது கலாச்சாரத்தை திணிக்க விருக்கின்ற பேராபத்துக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இனவாத வன்முறைக்கலாச்சாரத்தை தேசபக்த சக்திகள் ஒன்றிணைந்து போராட வேண்டும். அதே வேளை அரசின் மேலாதிக்க கலாச்சார நடவடிக்கை களையும் ஏகாதிபத்யத்தின் பூகோள மயமாக்கலினால் எமது கலாச் சாரத்திற்கு ஏற்படவிருக்கும் பேராபத் தையும் எதிர்த்துப் போராட இந்த நாட்டின் தேசபக்த சக்திகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு போராடுவது அவசர அவசியமாகும்.

**- நீர்வை பொன்னையன்**

✻ ✻

## நாசமாக்கப்பட்ட சக்தி

சிறைகளுக்கும்
சித்திரவதைகளுக்கும்
ஆக்கிரமிப்புக்களுக்கும்
புகுத்தப்பட்ட
புதியபாடத்திட்டம்!

கைக்குண்டுகள் வைத்துக்
கருக்கப்பட்ட
கருவறைகள்:
கோணேஸ், கமாலிற்றாவாய்...

வீச்சுக்கத்திகளின்
விளையாட்டுக்களால்
அறுத்துப்போட்ட வாலிபங்கள்
நீளும்...!

உயிர் விளைச்சலின்
உந்து சக்திகள்
உருக்குலைக்கப்படும்
அக்கிரம தேசம்!

ஆனாலும், ஆனாலும்...
எல்லாம் எழுவதற்காகவே

✻ ✻

## ஆய்வுகூட மேசையின் மேல்

மனித உடல்
பகுப்பாய்வு மேசைக்கு வந்தது!
முடிந்த ஆயிரம் ஆண்டுகளில்
மனிதனின்
வாழ்வியல் வெற்றி பற்றி - ஒரு
உடற்கூற்று ஆய்வுக்கு
மனித உடல்
பகுப்பாய்வு மேசைக்கு வந்தது:
இன்றைய எங்கள்
இனப்பிரச்சனையைப் போல...
மனிதம்
பகுப்பாய்வு மேசையில்!

✻ ✻

## காணாமல் போனவர்கள்

கதிரை இருந்தது:
கதிரையில்
கழற்றிக் கொழுவிய
சேட்டும் இருந்தது!
மேசையில் விரித்தபடி
புத்தகம் இருந்தது:
கைவிளக்கும்
எரிந்தபடி இருந்தது:
படித்துக் கொண்டிருந்தவனை மட்டும்
காணவில்லை!

விபவியினால் ஏற்பாடு செய்யப்பட்ட
திரு. கைலாசநாதனின் ஓவியக்
கண்காட்சியைப் பார்த்தபொழுது
எழுந்த என் உணர்வலைகளைக்
கவிதையாக்கியுள்ளேன்.

- மாவை வரோதயன்

# தோப்பில் பாசி

மலையாள நாடகத்தின் முன்னோடி தோப்பில் பாசி. இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்தார். கேரள மக்கள் கலைக் குழுவை, (Kerala Peoples Art Centre) நிறுவினர்.

முடியநாய புத்ரன், மூலதனம், நீங்கள் என்னை கம்யூனிஸ்டாக்கி, அஸ்வ மேதம், புதிய ஆகாயம், புதிய பூமி, போன்ற பல நாடகங்களை எழுதினார். இந்த நாடகங்கள் கேரளத்தின் பட்டிதொட்டிகளில் நடந்த தோடு பம்பாய், டெல்லி, சென்னை ஆகிய நகரங்களிலும் நடந்தது .

68 வது வயதில் காலமானார்.

கேரள நாடக உலகில் ஒரு புரட்சிகர அத்தியாயத்தை தோப்பில் பாசி படைத்தார்.

❊ ❊

# வீரதீரம்

ஒரு மாட்டுக் கொம்பினுள்ளே சென்ற ஒரு சுண்டெலி வெளியே வரமுடியாமல் திண்டாடிக் கொண்டி ருந்தது. அது கொம்பின் முன்னே மேலும் மேலும் சென்று கொண்டி ருக்கின்றது.

நண்பனே, தயவுசெய்து வந்த வழியே திரும்பிச் செல். நீ உள்ளே செல்லச் செல்ல பாதை ஒடுங்கி, மேலும் மேலும் ஒடுக்கமாகும்

கொம்பு சுண்டெலிக்குக் கூறியது

நீ சும்மா கிட நான் எல்லாத் தடை களையும் நகர்த்தெறிந்து கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கிறேன். ஒரு பொழுதும் நான் பின்வாங்க மாட்டேன். ஒரு நாளும் தோல்வியடைய மாட்டேன். எப்பொழுதும் வெற்றியுடன் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கின்ற வீரதீரன் நான்.

சுண்டெலி இறுமாப்புடன் கூறியது

ஆனால் நீ தவறான வழியில் சென்று கொண்டிருக்கிறாய்.

உனது புத்திமதிக்கு நன்றி. ஆனால் நான் என் வாழ்நாள் முழுவதும் என்னுடைய வளைக்குள் தான் இருந்து வந்துள்ளேன். எது சரியான வழி எது பிழையான வழி எனக்குத்தானே தெரியும். அது உமக்கெப்படி தெரியும்? என்னால் எப்படி தவறு செய்ய முடியும்? நீ உன்ரை வேலை யைப் பார் நான் என்ரை வேலையைப் பார்க்கின்றேன்.

செருக்குடன் கூறிவிட்டு சுண்டெலி மேலும் மேலும் முன்னுக்குச் சென்று கொண்டிருந்தது. அது முன் செல்லச் செல்ல கொம்பிற்குள்ளேயிருக்கும் பாதை ஒடுங்கி ஒடுங்கி இறுக்கமாக வந்தது.

சிறிது நேரத்தில் இந்த வீராதிவீரன் முன்னுக்கும் செல்ல முடியாமல் பின்னுக்கும் திரும்பிவர முடியாமல் மூச்சுத் திணறிச் செத்துவிட்டான்.

**நாட்டார் கதை**

❊ ❊

# உலகில் பெண்களின் பரிதாப நிலை

உலகில் பாலியல் வல்லுறவுக்கும் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்ட பெண் களின் எண்ணிக்கை விகிதாசாரப்படி:-

| | |
|---|---|
| உகண்டா | - 57.9 சதவீதம் |
| பப்புவா நியூகினியா | - 56.1 ,, |
| பங்களாதேஷ் | - 47 ,, |
| எத்தியோப்பியா | - 45 ,, |
| எகிப்து | - 34.4 ,, |
| ஐக்கிய ராஜ்யம் (U.K) | - 30 ,, |
| கனடா | - 29 ,, |
| மெக்சிக்கோ | - 27 ,, |
| அமெரிக்கா (U.S.A) | - 22.1 ,, |
| நைஜீரியா | - 31.4 ,, |
| நெதர்லாந்து | - 20.8 ,, |
| ஸ்ரீ லங்கா | - ? |

**சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8ம் திகதி**

❊ ❊

நூல் விமர்சனம்

# ஈன்ற பொழுதில்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு ஒன்று 'ஈன்ற பொழுதில்' என்னும் மகுடத்துடன் வெளிவந்திருக கிறது. இது அண்மையில் ஈழத்துத் தமிழ் சிறுகதைக் களத்திற்கு வந்த புதுப் புனல் ஆகும்.




இப்பொழுது இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் போரினால் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருப்பவர்கள் தமிழர். தமிழருள்ளும் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பெண்களாவர். அவர்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் படும் இன்னல்கள் சொல்லி முடியாதவை. வீட்டுக்கு வெளியே சென்ற மகன் பாதுகாப்பாக வீடு வந்து சேரவேண்டுமே என்று ஏங்குகின்ற தாய்,தமக்கு எந்த நேரம் என்ன வடிவில் ஆபத்து வருமோ என்று வெளியே போய்வரப் பயப்பயப்படும் கன்னியர், காணாமல் போன கணவனைத்தேடி அலைகின்ற இளம் குடும்பப்பெண்கள், குடும்பத் தலைவனை இழந்து உணவுக்கும் வழியறியாது பரிதவிக்கும் விதவைகள், சுற்றி வளைப்பின்போது தமது பிள்ளைகள் பிடிபடக்கூடாதே என்று பிரார்த்திக்கும் குடும்பத்தலைவியர். இவவாறாகத் தமிழினப்பெண்ணினம் முழுவதுமே துன்பக் கடலில் அமிழ்ந்து கிடக்கிடக்கிறது! இவர்கள் படும் தீராத துயரினை எல்லாம் நெஞ்சை உருக்கும் சிறுகதைகளாக வடித்துத் தந்திருக்கிறார், திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், இந்த நூலிலே!

ஆசிரியர், அந்தப்போர்ச்சூழலில் பெண்கள் அடைகின்ற பல்வேறு இன்னல்களை எல்லாம் கூர்ந்து நோக்கி,அவற்றை எல்லாம் புரிந்து கொண்டு இந்தக் கதைகளைப் படைத்திருக்கிறார். அதனால் அந்நூலிலுள்ள ஒவ்வொரு கதையும் யதார்த்தமாக உருப்பெற்றிருக்கின்றன. அத்துடன் அவை படிக்கும் போது உணர்ச்சிப்பிழம்புகளாக வந்து எங்களது உள்ளத்தில் சுடர்தெறிக்கின்றன. படித்து முடித்த பின்பும் அங்கே அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. ஆசிரியரே ஒரு பெண்ணாக இருப்பதால் தான் போரினால் தமிழ்ப்பெண்கள் அடைந்திருக்கும் அவலங்களையும் மன உளைச்சல் களையும் இவ்வளவு தத்ரூபமாக எடுத்துக் காட்ட முடிகிறது என்பதில் ஐயமில்லை.

போரின் கொடுமையால் தனி மனிதருக்கு ஏற்படும் இன்னல்களை மாத்திரமன்றி, தமிழ்ச்சமுதாயத்தில் தோன்றியிருக்கின்ற சமுதாய விழுமியச் சீரழிவுகளையும் ஆசிரியர் எடுத்துக்

(9ம் பக்கம் பார்க்க)

* **உலகின்** 13 மில்லியன் சிறுவர்கள் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

* அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்ட சிறுவர் கள் கல்வியறிவற்றவர்களாக இருக்கின்றார்கள். இந்நிலைமை யில் அபிவிருத்தி அடையாத நாடுகளின் சிறுவர்களது கல்வி?

* நாளாந்தம் உலகில் 7000 எயிட்ஸ் நோயாளிகள் உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கின்றனர்.

* தற்போது உலகின் வாழும் சிறுவர்களில் 5.40 மில்லியன் சிறுவர்கள் யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

* யுத்த பிரதேசங்களில் யுத்தம் காரணமாக 2 மில்லியன் சிறுவர் கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

# சிறுவர்கள் அழிந்து கொண்டிருக்கிறார்கள்

* உலக பணச் சந்தையில் நாளாந்தம் சராசரி 1500 பில்லியன் அமெரிக்க டொலர்கள் புளக்கத்தி லுள்ளன. ஆனால் உலக சனத் தொகையில் 1.2 பில்லியன் மக்கள் நாளாந்தம் ஒரு அமெரிக்க டொலருக்கு குறைவாகத்தான் வருவாய் பெறுகின்றனர். ஆகவே சிறுவர்களின் நிலை?

* 600 மில்லியன் சிறுவர்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

* 1995 ஆம் ஆண்டில் மாத்திரம் 5 லட்சம் சிறுவர்கள் எயிட்ஸ் நோயினால் இறந்துள்ளனர்.

* 15 வயதிலிருந்து 24 வயது வரையான இளைஞர்களில் ஐவர் ஒவ்வொரு நிமிடமும் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

* யுத்தம் காரணமாக 6 மில்லியன் சிறுவர்கள் பாரதூரமான காயங் களுக்குள்ளாகி நிரந்தர அங்கவீனர் களாகியுள்ளனர்.

* யுத்தம் காரணமாக 1 மில்லியன் சிறுவர்கள் அநாதைகளாக்கப் பட்டுள்ளனர்.

* யுத்தத்தின் காரணமாக 15 மில்லியன் சிறுவர்கள் அகதிகளாக் கப்பட்டுள்ளனர்.

* யுத்தத்தினால் 30 மில்லியன் சிறுவர்கள் யுத்தபீதியினால் உள ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட் டுள்ளனர்.

ஆதாரம்:-

ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதியம்.
உலக சிறுவர்கள் நிலை 2000 ஆண்டுச் சுற்றறிக்கை.

* * * *

# சித்திரைப் புது நூல் விழா

**சென்னையில்** ஆண்டில் ஒருமுறை நடைபெறும் புத்தககக் கண்காட்சி பற்றி நீங்கள் அறிவீர்கள். இங்கு நூல்களை பிரசுரிப்போரும் நூலாசிரியர்களும் தங்கள் புத்தகங்களை விற்கக் கூடியதாகவும் தாங்கள் விரும்புவதை தேர்ந்தெடுத்து சிறிது குறைந்த விலையில் வாங்கக் கூடியதாகவுமுள்ளது.

இதேபோன்று ஈழத்தில் ஓரிடத்தில் ஆண்டுதோறும் நூல்விழாவொன்றினை நடாத்தி ஈழத்து நூல் பிரசுரகர்த்தாக் களுக்கும், நூலாசிரியர்களுக்கும் தங்கள் புத்தகங்களை கண்காட்சியில் வைக்கவும் விற்கவும் அத்துடன் சம காலத்தில் நடைபெறும் கருத்துப் பரிமாறல்களில், விமர்சகர்களின் அறிமுகமான அந்நி யோன்னியமான முறையில் பங்குபற்றவும் இதுவரை விற்க முடியாமல் இருக்கும் தங்கள் நூல்களை சற்றுக் குறைந்த விலையிலேனும் நூலாசிரியர்கள் விற்கவும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், யாவற்றுக்கும் மேலாக நூல்களைப்பற்றி பேசும், பார்க்கும், வாசிக்கும் ஒரு கலாசாரத்தை ஏற்படுத்தவும் நான் பெரிதும் விரும்புகிறேன்.

மேலும் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இத்தகு முயற்சியினை முன்னெடுத்துச் செல்ல ஏற்ற இடமாக திருகோணமலைதான் அமையலாம் என நான் நம்புகிறேன். அத்தோடு திருமலை, மலைநாடு, கொழும்பு , மட்டக்களப்பு, வவுனியா, ஏன் கப்பலின் மூலம் யாழ்ப்பாணத்திலும் கூட வரக்கூடிய ஒரு மத்தியஸ்தானமாகவும் அமைந்துள்ளது.

முதலில் இலங்கைப் புத்தகத்தை மட்டும் நாம் இங்கு அறிமுகப்படுத்துவோம். தங்கள் புதிய நூல்களை வெளியிட விரும்புவோரும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தலாம். முடிந்தால் காலம் செல்ல செல்ல வெளிநாட்டு தமிழ் அறிஞர்களும் இங்கு வரலாம் என எண்ணுகிறேன்.

இச்சித்திரைப் புதுநூல் விழாவினை (புது நூல் விழாவெனப் பெயர் இருந்தாலும் பழைய நூல்களையும் கண்காட்சியில் வைத்து விற்கலாம்). இவ்வருடம் சித்திரை மாதம் 14,15,16 ந் திகதிகளில் (வெள்ளி , சனி, ஞாயிறு ) புதுவருடம் 12,13 புதனும் வியாழனும் திருமலை கலாசார மண்டபம் அது சார்ந்த வளாகத்தில் நடாத்தலாம் என எண்ணுகிறேன். இவை எனது உரத்த சிந்தனைகளே. இத்திட்டத்தினை வெற்றி பெறச்செய்வது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே தயவு செய்து இம்முயற்சியில் பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக என்னுடன் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொண்டு தவறாமல் உங்கள் விருப்பினைப் பதிவுசெய்யவும். உங்களுக்கும் தெரிந்தது போலவே ஓரளவேனும் பிரசுரகர்த்தாக்கள், எழுத்தாளர்கள் நிச்சயமாக பங்குபற்ற தங்கள் விருப்பத்தினை தெரிவித்தாலே நான் இம்முயற்சியைத் தொடரலாம். இந்த ரியூஷன் கலாசார காலத்தில் நம் சிறார்கள் இடையேயும் இத்தகு விடயங்களில் ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்துவதும் முக்கியமானது. நான் கூடிய அளவு எனது முயற்சியில் உதவியாளர்களாக உயர்தர, பல்கலைக் கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவ மாணவிகளையே சேர்த்துக் கொள்ள வுள்ளேன். எனவே உடன் தொடர்பு கொள்ளுங்கள். முடிந்தால் கடுகதி கடிதங்கள் மூலம்.

**கா. சிவபாலன்**
இல. 2, சாரதா ஒழுங்கை ,
திருகோணமலை.

## கலை

கலை புதிய கேள்விகளைக் கேட்கின்றது,

எதிர்த்து நிற்கின்றது,

புதிய சிந்தனைப் பாதைகளுக்கு வழி கோலுகிறது,

எதையும் ஒதுக்கிறது,

மாறுதல் அதன் அடிப்படைத்தத்துவம்.

அதற்காக அது எதுவித ஆபத்துக் களையும் ஏற்கத் தயாராக இருக்கிறது.

## மதப்பற்று

அளவுக்கு மீறிய மதப்பற்று, மூடபக்தி, இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாய் இறுகப் பற்றியுள்ளன. அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து நாகரீகத்தை அழித்து, எத்தனையோ சமூதாயங் களை நம்பிக்கை இழக்கச் செய்து விட்டன. அந்தப் பயங்கரக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின் மனித சமுதாயம் இன்றிருப்பதை விட பன்மடங்கு உயர் நிலை எய்தி யிருக்கும்.

சுவாமி விவேகானந்தர் - 1893ல்




MR. K. SADDANATHAN
21, SADDANATHAR RD
NALLUR
JAFFNA.

81/4. பாகொடை வீதி, நுகேகொடை.
தொ. பே. - 812407.